## அ.தி.மு.க.வில் மூத்த தலைவர்களை துரத்திவிட்டு

# துரோகத்தால் முதல்வரான பழனிசாமி தி.மு.க.வை பற்றிப் பேசலாமா?

## கழக வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்து மாணிக்கம் பேச்சு!





சென்னை, செப். 13-

சென்னை, கலைஞர் நகர் தெற்கில் தி.மு.க. இளைஞர் அணி பாக முகவர்கள், வட்ட கழக நிர்வாகிகள் கூட்டம் பகுதி அமைப்பாளர் தினேஷ் தலைமையில் சேர்மன் மண்டபத்தில் நடந்தது.

கூட்டத்தில் பேராசிரியர் சுப. வீரபாண்டியன், தலைமை செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன், சட்டமன்ற உறுப்பினர் பிரபாகர் ராஜா, பகுதி கழக செயலாளர் கண்ணன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டு பேசினர்.

கூட்டத்தில் தி.மு.க. வர்த்தகர் அணி செயலாளர் கவிஞர் காசிமுத்து மாணிக்கம் பேசியதாவது:-

“தமிழகத்தில் தேர்தல் பணி தொடங்கப்பட்டுவிட்டது, தலைவர் அவர்கள் தலைமைக் கழகத்தில் கழக தோழர்களை தொகுதி, தொகுதியாக பார்த்து வருகிறார். இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், ஊர், ஊராக சென்று உதயசூரியனுக்கு வாக்கு கேட்டிட, தொகுதி, தொகுதியாக கழக தோழர்களை உற்சாகம் தந்திட தொகுதி நிர்வாகிகள் கூட்டத்தை நடத்திட தொடங்கி விட்டார்” முதல் தொகுதி கூட்டம் காஞ்சிபுரம் ஆகும்.

அறிஞர் அண்ணாவின் சொந்த ஊரான காஞ்சிபுரத்தில்தான் தொடங்கினார்.

அவருக்கு தெரியும், தனது தாத்தாவிடம் பேச்சு வருகிறதா என சோதிக்க ஏதாவது ஒரு சொல் சொல்லுங்கள் என டாக்டர்கள் கேட்ட உடன், தனது தாத்தா “அண்ணா” எனச் சொல்லி தனது அன்றைய தகுதியை வெளிப்படுத்தியவர் என்பது.

### அண்ணா நூற்றாண்டு நூலகம் தந்த கலைஞர்!

தனது தாத்தாதான் ஆசிய கண்டமே மெச்சும் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகத்தை தந்தவர். தனது தாத்தாவான கலைஞர், தலைமைக் கழகத்திற்கு அண்ணா அறிவாலயம் என பெயர் வைத்தவர்.

தனது சுற்றுப்பயணத்தை 234 தொகுதியிலும் கழக நிர்வாகிகளை நேரில் சந்தித்து பெட்டிசன் பெற்று, அந்த பெட்டிசனில் சிலவற்றை மேடையிலேயே படித்து, விசாரணை நடத்தி, ஆறுதலும், விடிவும் காணும் தனது புதிய திட்டத்திற்கான தொடக்க தொகுதியாக அண்ணாவின் தொகுதியான காஞ்சிபுரத்தை தேர்ந்தெடுத்ததன் மூலம் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அண்ணாவின் வாரிசு, திமுகவின் வாரிசு என நிரூபித்திருக்கிறார்.

எடப்பாடி, அ.தி.மு.க. குடும்ப அரசியலை தகர்த்தும் என்கிறார்.

ஜெய்குமார் மகன் எம்.பி ஆகலாம், ராஜன் செல்லப்பா மகன் எம்.பிக்கு நிற்கலாம். ஓ.பி.எஸ். மகன் எம்.பி. ஆனது அ.தி.மு.க.வில்தானே!

காஷ்மீரில் ஷேக் அப்துல்லா, பரூக் அப்துல்லா, உமர் அப்துல்லா முதல்வர்களாக வரலாம், மெகபூபாவும், அவர் தந்தையும் முதல்வராகலாம்.

### வாரிசு அரசியலை எடப்பாடி பேசலாமா?

உத்திரபிரதேசத்தில் முலாயம்சிங்கும், அவர் மகன் அகிலேஷ் யாதவும் முதல்வராகலாம். அரியானாவில் தேவிலால், பஜன்லால், உத்திரகாண்டில் சிபுசோரன், ஹேமசோரன் முதல்வர்களாக இருக்கலாம். மத்திய பிரதேசத்தில் மாதவராவ் சிந்தியா, காங்கிரஸில் கோலோச்சினார். அவர் மகன் ஜோதி ராதித்ய சிந்தியாவை பிடித்து பா.ஜ.க. மத்திய அமைச்சர் ஆக்கலாம். மாராட்டியத்தில் பால் தாக்கரே, அவர் மகன் உத்தவ் தாக்கரே, சரத்பவார் அவர் மகள் சுப்ரியா, அவரின் அண்ணன் மகன் அஜித்பவார், பீகாரில் லல்லுபிரசாத் முதல்வர், அவர் மனைவி ராப்ரிதேவி முதல்வர், அடுத்த முதல்வர் தேஜஸ்வி யாதவ், ஒரிசாவில் பிஜூபட்நாயக் முதல்வர், அவர் மகன் நவீன் பட்நாயக் முதல்வர். ஆந்திராவில் என்.டி. ராமாராவ் முதல்வர், அவர் மருமகன் சந்திரபாபு நாயுடு முதல்வர், என்.டி.ஆர் மகள் புரந்தேஸ்வரி மத்திய அமைச்சர்.

அதே ஆந்திராவில் இராஜசேகர் ரெட்டி முதல்வர், அவர் மகன் ஜெகன்மோகன் ரெட்டி முதல்வர், கர்நாடாகாவில் எஸ்.ஆர். பொம்மை முதல்வர், அவர் மகன் பொம்மையும் முதல்வர். கர்நாடாகாவில் பா.ஜ.க. தலைவர் எடியூரப்பா, இப்போது கர்நாடாகாவில் பா.ஜ.க. தலைவர் எடியூரப்பா மகன் விஜயேந்திராதான். கர்நாடாகாவில் தேவகவுடா முதல்வர், அவர் மகன் குமாரசாமி முதல்வர். பாரத பிரதமராய் இருந்த தேவகவுடாவின் பேரன் முன்னாள் எம்.பி. எண்ணுகிறார் சிறைக்கம்பி.

மூப்பனார் எம்.பி. அவர் மகன் வாசன் உங்களால் எம்.பி. தானே!

அவ்வளவு ஏன் தமிழகத்தில் விஜயகாந்த் மரணத்திற்கு பின் அவர் மனைவி பிரேமலதா, மைத்துனர் சுதீஷ், மகன் இளைஞர் அணி விஜயபிரபாகரன், தைலாபுரத்தில் குடும்பமே வாரிசு சண்டை.

ஜானகி எம்.ஜி.ஆரை முதல்வராக தேர்ந்தெடுத்தவர் யார்? எம்.எல்.ஏ கூட ஆகாமல் முதல்வரானதற்கு காரணம் எம்.ஜி.ஆரின் மனைவி என்பதுதானே.

காங்கிரஸ் தலைவர் குமரி அனந்தன் மகள்தானே தமிழிசை செளந்தர்ராஜன், குமரி அனந்தன் தம்பிதானே வசந்தகுமார் எம்.பி. அவர் மகன் விஜய் வசந்தும் எம்.பி. காங்கிரஸ் ப. சிதம்பரம் மகன் கார்த்திக் சிதம்பரம் எம்.பி, கிருஷ்ணசாமி அவர்களின் மகன் விஷ்ணுபிரசாத் எம்.பி., சரத்குமார் அவர்களின் மனைவி ராதிகா சரத்குமார் எம்.எல்.ஏ. வேட்பாளர்.

### பணத்தால் - சசிகலா தயவால் முதல்வரான எடப்பாடி!

இப்போது கூட அ.தி.மு.க.வில் உழைத்த செங்கோட்டையனோ, பொன்னையனோ வரவில்லை, எடப்பாடி தானே வந்துள்ளார்.

ஜெயலலிதாவால் ஒருமுறைக்கு இருமுறை அடையாளம் காட்டப்பட்ட ஓ.பி.எஸ். முதல்வராகவில்லை. “சின்னம்மா” “சின்னம்மா” என உங்களுக்கு சின்னமாக திகழந்த சின்னம்மாவை சின்ன அம்மா (கடுகளவு அம்மாவாக) வாக மாற்றிவிட்டு, வெல்லமண்டி வைத்திருந்த எடப்பாடி நெடுஞ்சாலை, பொதுப்பணி என அமைச்சர் பொறுப்பால் கிடைத்த பணத்தால் எடப்பாடி வந்தாரே தவிர, உழைப்பால் உயரவில்லை. எந்த தொண்டனும், உங்களை முதல்வராக கொண்டு வரவில்லை. பணம் இருந்ததால் சசிகலாவால் நியமிக்கப்பட்ட முதல்வர்.

ஒண்ட வந்த பிடாரி, ஊர் பிடாரியை விரட்டுவதுபோல் அ.தி.மு.க.வின் மூத்த தலைவர்களை, இயக்கத்தை விட்டே தூக்கி வீசிவிட்டு, துரத்தி விட்டு ஏதோ நேர்மையாக வந்ததுபோல எங்களின் எதிர்காலமாம் சின்னவரை வாரிசு அரசியல் என தூற்றுகிறார் எடப்பாடி.

திருவிழாவுக்கு போன நேரத்தில் வீட்டுக்குள் புகுந்து களவாடிய திருடனைப்போல், உங்களின் 234 வேட்பாளருக்கும் தேர்தல் நிதி பெற்று தந்து ஜெயிலுக்கு போன சசிகலா அம்மையாரை, அவர் ஜெயிலுக்குள் இருந்த நேரம் பார்த்து, அவர் தந்த அதிகாரத்தையும், அவரால் கிடைத்த பணத்தையும், அவருக்கு எதிராக செயல்பட்ட நிர்வாகிகளை திரட்டி, அவரது கணவர் மரணத்துக்கு கூட செல்லாத, மற்றவர்களை செல்லவிடாது. துரோகியாக ஒட்டிக் கொண்டிருக்கும் நீ எங்கள் எதிரில் பேசலாமா? அன்பின் புதியவிதி, ஆற்றலின் மறுவிதி உதயநிதியை கேள்வி கேட்கும் தகுதி இல்லாதவர் நீங்கள்.

### அ.தி.மு.க. சிதறல்களுக்கு தி.மு.க. எப்படி காரணமாகும்!

அ.தி.மு.க.வின் சிதறல்களுக்கு தி.மு.க. காரணமாம். அம்மாவாசைக்கும் அப்துல் காதருக்கும் எந்த சம்பந்தமும் இல்லாது மாதிரி, வெண்பொங்கலுக்கும், சர்க்கரைக்கும் சம்பந்தம் இல்லாதது மாதிரி, மொட்டைத்தலைக்காரிக்கும் முழம்பூவுக்கும் சம்பந்தம் இல்லாத மாதிரி, தி.மு.க.விற்கும் செங்கோட்டையன் புரட்சிக்கும் என்ன சம்பந்தம்? அமித்ஷாவை பார்க்க போகிறேன் என சொல்லாது கார் மாறி மாறி சென்று எடப்பாடி பார்க்கிறார்.

ரிஷிகேஷம் போகிறேன் ராமரை பார்க்க அயோத்தி போகிறேன் என சொல்லி விட்டு செங்கோட்டையன், அமித்ஷாவை பார்க்க போகிறார்.

கூட்டணியே இருந்தாலும் சொல்லிவிட்டு பார்த்தால் என்ன தப்பு?

தி.மு.க.வை விடுதலை சிறுத்தையோ, ம.தி.மு.க.வோ. கம்யூனிஸ்ட்டோ, காங்கிரஸோ சந்தித்தால் இப்படித்தான் திருட்டுத்தனமாக பார்க்கிறார்களா?

இலைகள் சும்மா இருந்தாலும், காற்று அவற்றை சும்மா இருக்க விடுவதில்லை என்பர். அ.தி.மு.க. ஒற்றுமையாக இருந்தாலும் பா.ஜ.க. அவர்களை ஒற்றுமையாக இருக்க விடாது.

### நயினார் பொய்யும் செங்கோட்டையன் பேட்டியும்!

செங்கோட்டையன் எங்கே போனார் என தெரியாது. ஒரு வேளை தி.மு.க. மறைத்து வைத்து இருக்கலாம் என்று நயினார் சொன்னார். இப்போது செங்கோட்டையன், நிர்மலாவை, அமித்ஷாவை சந்தித்துவிட்டு வந்ததாக கூறி விட்டார். தி.மு.க. மீது பழிபோட்ட நயினார் மன்னிப்பு கேட்க வேண்டும்.

தேர்தலுக்கு முன்பாக தி.மு.க. கூட்டணி உடையுமாம் எடப்பாடி கூறுகிறார்.

தான் திருடி பிறரை நம்ப மாட்டாள். சுக்கு நூறாக உடைந்த அ.தி.மு.க. யானை பலத்துடன் இருக்காம். தி.மு.க. உடையுமாம் கூறுகிறார்.

ஆற்றில் அடித்து செல்லப்பட்ட செல்லையா சொன்னானாம். “உலகம் போகிறது உலகம் போகிறது” என்று கத்தினானாம்.

ஒரு வழியா அவனை காப்பாற்றி என்னடா உலகம் போகிறது என்றாயே, என்ற போது “நான் செத்துப்போனால் என்னைப் பொறுத்த வரை உலகம் செத்தது போலத்தானே” என்றானாம். அதுபோல இவரது கூட்டணி உடைந்தால் தி.மு.க. கூட்டணியும் உடையுமாம்.

எப்படி உடையும்? உருவாக்கின சசிகலா, தினகரனையோ தூக்கி வீசியவர் எடப்பாடி.

தலைவர் அவர்கள் “இந்த மாபெறும் வெற்றி என்னால் மட்டும் சாத்தியமானதல்ல, அது உங்களால் நடந்தது” (கூட்டணி கட்சியினர் அமர்ந்திருந்து வரிசையை பார்த்து) என்கிறார்.

கூட்டணியில் மேலும் சில கட்சிகள் சேருகின்றனவா என நிருபர்கள் முதல்வரை பார்த்து கேட்டபோது “வருவதற்கு வாய்ப்பு உண்டு. கூட்டணி கட்சி தலைவர்களிடம் கலந்து பேசிவிட்டு முடிவு செய்வோம்” என்றார்.

### முதல்வர் தலைமையில் 2026 ல் மாபெரும் வெற்றி!

நான்தான் பெரியண்ணன் என்கிற தலைக்கணம் எங்கள் தலைவருக்கு இல்லை. எப்படி எங்கள் கூட்டணி உடையும்.

முதலீடு ஈர்ப்பில் 10 ஆண்டுகளில் ஜெயலலிதா எடப்பாடி சேர்ந்து 5 லட்சம் வரை. நடைமுறைப்படுத்தப்பட்டதோ 10 சதவீதம் மட்டுமே. அதாவது 50 ஆயிரம் கோடி. இந்த 4 ஆண்டில் தளபதி பெற்ற வெளிநாட்டு முதலீடு தொகை 10.5 லட்சம் 77.5% நடைமுறைக்கு ஏறத்தாழ 8 லட்சம் கோடி செயல்பாட்டுக்கு வந்துவிட்டது.

தளபதிக்கு “கல்வியும் தொழிலும் இரண்டு கண்கள்”

வரும் 2026ல் 234 ஐயும் பெற்றிட உழைப்போம்.

இவ்வாறு கவிஞர் காசிமுத்து மாணிக்கம் பேசினார்.

# சென்னை மேற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிவிப்பு!



சென்னை மேற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் இன்று (13.09.2025 சனிக்கிழமை) காலை 11.00 மணியளவில், JAAG HOTEL, எண்.41, பெரியார் ரோடு, இளையராஜா ஸ்டுடியோ (பின்புறம்), கோடம்பாக்கத்தில் மாவட்ட அவைத் தலைவர் து.விக்டர் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதிப் பார்வையாளர்கள், மாவட்ட / மாநில நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: தி.மு.க. முப்பெரும் விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள்

**நே.சிற்றரசு**

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.



மாதவரம் சட்டமன்ற தொகுதி 17வது வார்டில் வரும் 16ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் சீரிய திட்டமான உங்களுடன் ஸ்டாலின் திட்டம் வடபெரும்பாக்கம் சமுதாயக்கூடத்தில் நடைபெற உள்ளது. இதற்கான அழைப்புகளை பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் வீடு வீடாக சென்று வழங்கினார்கள். இந்நிகழ்வில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன், சுகாதார அதிகாரி கிருஷ்ணன், சுகாதார ஆய்வாளர் ஜெபா, வட்ட செயலாளர் கே. கருணாகரன், வட்ட துணைச் செயலாளர் சி. பாலாஜி, பகுதி பிரதிநிதி சி. மூர்த்தி, மாவட்டத் துணை அமைப்பாளர்கள் கே. சண்முகப்ரியன், டி. வினோத், எஸ். நாகராஜ்,பாக முகவர் டி. திவாகர், எம்.ஜான்சன், தசரதன், ஆனந்தன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

# தமிழ்த் தாயின் தலைமகன் பிறந்த நாள்!



தமிழுக்கு ஏற்றம் தந்த, தமிழ்நாட்டிற்கு மாற்றம் தந்த தமிழ்த் தாயின் தலைமகன், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெருந்தகை பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் செப்டம்பர் 15.

“மரம் இருக்கிறதே அதன் அடிப்பகுதிதான் மரத்தை தாங்கிப் பிடிக்கிறது. ஆனால் அடிமரத்தில் பூ இருக்காது, பழம் இருக்காது. நுனி மரம் பூத்துக் குலுங்குகிறதே என்று அடிமரம் வருத்தப்படுவதில்லை. அடிமரமாவது கண்ணுக்குத் தெரிகிறது. ஆனால், அந்த அடிமரத்தையும் தாங்கிப் பிடிக்கும் வேர்கள் கண்ணுக்குத் தெரியாமல் மண்ணுக்குள் மறைந்து கிடக்கின்றன” என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் மாபெரும் மக்கள் இயக்கம் இன்று பரந்து, விரிந்து, பூத்துக் குலுங்குகிறது என்றால் , அதற்குக் காரணம் , எவ்வித எதிர்பார்ப்புமின்றி கண்ணுக்குத் தெரியாமல் வேர்கள் போல கழகத்திற்காக உழைக்கும் கோடானு கோடி கழகத் தொண்டர்கள்.

1967 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்ற பேரறிஞர் அண்ணா அவர்கள், தமிழ்நாடு என பெயர் சூட்டியது, ஏழை மாணவர்களுக்கு இலவசக் கல்வி, இருமொழிக் கொள்கை, சுயமரியாதைத் திருமணம், பேருந்துகளில் திருக்குறள் பொறிப்பு, புன்செய் நிலங்களுக்கு நில வரி ரத்து, இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு, ஶ்ரீ என்ற வடமொழிச் சொல்லுக்கு பதில் திரு எனும் தமிழ்ப் பெயர் என குறுகிய காலத்தில் அதிக சாதனைகளை நிகழ்த்தினார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவிற்குப் பிறகு, அவர்கள் வழியில் திமுக ஆட்சியை நான்கு முறை அமைத்த பெருமைக்குரியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். கலைஞர் என்ற பெயரை உச்சரிக்காமல் தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றை எழுத முடியாது என்ற அளவுக்கு பொற்கால ஆட்சியை தமிழக மக்களுக்கு வழங்கிய பெருமை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையே சாரும்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மறைவிற்குப் பிறகு தமிழ்நாட்டில் மீண்டும் கழக ஆட்சியை மலரச் செய்த பெருமை தளபதி ஸ்டாலின் அவர்களையே சாரும். பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்துக் கொடுத்த பாதையில், தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடி என்பதற்கேற்ப, நான் முதல்வன் திட்டம், தவப்புதல்வன் திட்டம், மகளிர் உரிமைத் தொகை, விடியல் பயணம், உங்களுடன் முதல்வர் திட்டம், தாயுமானவர் திட்டம், புதுமைப் பெண் திட்டம் என பல்வேறு திட்டங்களைத் தீட்டி மக்கள் மனங்களில் நீக்கமற இடம் பிடித்துள்ளார் முதலமைச்சர் தளபதி ஸ்டாலின் அவர்கள்.

**டாக்டர் வா. மைத்ரேயன்**
நாடாளுமன்ற மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர்.



திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆணி வேர் மாநில சுயாட்சி. ஒன்றியத்தில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்பதற்காக தொடர்ந்து அழுத்தம்திருத்தமாக குரல் கொடுத்து வரும் தலைவர் நம் தளபதி அவர்கள்.

“பணத்தால் இயங்க வேண்டிய நிலையிலுள்ள இயக்கம் பணக்காரர்களின் இயக்கமாகி விடும். அங்கே தியாகமும் தொண்டுணர்வும் பின்னுக்குத் தள்ளப்படும். சுழல் சொல்லர்களும், தன்னலங்களும் தலைமையேற்று விடுவர்” என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். இன்று அந்த நிலமைக்குச் சென்றுவிட்டது எதிர்க் கட்சியான அ.இ.அ.தி.மு.க. சேர்த்து வைத்த பணத்தை பாதுகாக்க கொத்தடிமையாக அந்தக் கட்சி மாறி விட்டது. அந்த கட்சிக்கான தலைமையகம் டெல்லிக்குச் சென்று விட்டது. இவர்களுடைய இந்த நடைமுறை தமிழ்நாட்டில் எடுபடாது.

ஒருமுறை பேரறிஞர் அண்ணா அவர்கள் பொதுக் கூட்டத்தில் ஒலிபெருக்கி மூலம் பேசிக் கொண்டிருந்தார். ஆனால் பெரும்பாலான தொண்டர்களுக்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் முகம் தெரியவில்லை. உடனே ஒரு தொண்டர் ஓடிப்போய் ஒரு பெட்டியை கொண்டு வந்து போட்டு, அதில் நின்று பேசுமாறு அண்ணாவை வேண்டினார். உடனே அண்ணா அவர்கள் அந்தப் பெட்டியின் மீது ஏறி நின்று “தொண்டர்களால் உயர்ந்தவன் நான்” என்று பேச ஆரம்பித்தார். பேரறிஞர் அண்ணா அவர்களின் வழிவந்துள்ள நம் முதலமைச்சர் அவர்கள் இன்று அந்த நிலையை அடைந்துள்ளார்கள்.

கடந்த எழுபத்தைந்து ஆண்டுகால தமிழ்நாட்டு அரசியலில் மாபெரும் மாற்றத்தை உருவாக்கிய முக்கியமான தலைவர்களில் முதன்மையானவர் பேரறிஞர் அண்ணா.

1960 -70 களில் மாணவப்பருவத்தில் இருந்தவர்களிடம் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது இந்தித் திணிப்புக்கு எதிரான மொழிப்போராட்டம். அவர்களில் நானும் ஒருவன்.

1962-68-ல் கிழக்குத் தாம்பரம் தேசிய உயர்நிலைப் பள்ளியில் 3- 8 வகுப்பு மாணவனாக இருந்த போது அந்த மொழிப் போரின் தீவிரத்தை நேரடியாக பார்த்தவன்.

அந்த காலகட்டத்தில் மொழிப் போராட்டத்தை முன்னின்று நடத்திய அண்ணா தனது மந்திரப் பேச்சால் மக்களை கட்டிப்போட்டார்.

1967-ல் பேரறிஞர் அண்ணா முதலமைச்சர் ஆன பிறகு 1968ல் நாகபுரிக்குச் சென்றேன்.

1969 பிப்ரவரி 3-ம் தேதி அண்ணா அவர்கள் மறைந்தது என்னை மிகவும் பாதித்தது. இரண்டு நாட்கள் அழுதுகொண்டே இருந்தேன் ஏதோ எனது குடும்பத்தில் ஒருவர் இறந்தது போல.

என் தகப்பனார் நாக்பூர் டைம்ஸ் என்ற நாளிதழில் உதவி ஆசிரியராக இருந்ததால் நாடு முழுவதிலும் இருந்து வரும் நாளிதழ்களில் அண்ணாவின் மறைவு பற்றிய செய்தி வந்த அனைத்து பத்திரிகைகளையும் சேகரித்து இன்றும் பொக்கிஷமாக பாதுகாத்து வருகிறேன்.

13 வயதில் அப்போது நான் கவிதை என்ற பெயரில் கிறுக்கியது இதோ:

**“மண்ணில் மக்கள் நலம் கொள்ள**
**விண்ணில் தேவர்கள் வாழ்த்தொலிக்க**
**கண்ணின் இமை போல் காஞ்சியிலே**
**அண்ணனும் தோன்றினர் அற்புதமாய்**

**இளமையில் படிப்பு அவரிடத்தில்**
**வளமைப் பொலிவுடன் தோன்றியதாம்**
**இச்சையுடனே அவருமே**
**பச்சையப்பனில் படித்தனராம்.**

**பெரியாருடனே முரண்பட்டு**
**அரியார் சிலருடன் அண்ணனுமே**
**திராவிட நாடென்ற கொள்கையுடன்**
**திமுகவையும் நிறுவினராம்.**

**பதினைந்து ஆண்டுகள் வளர்த்து அதற்கு**
**புத்துணர்ச்சியும் ஊட்டினராம்**
**அறுபத்தேழில் அரியணை அமர்ந்து**
**எண்பது சாதனை புரிந்தனராம்.**

**பட்ட மரமென மாடு வீழ்ந்தது**
**துளிர் விட்ட மரமென சூரியன் மலர்ந்தான்**
**முதல்வராகப் பணி புரிந்தார்**
**தவப் புதல்வரான அறிஞர் அண்ணா.**

**புற்றுநோயும் அவரை மற்றிரு**
**ஆண்டில் ஆட்கொண்டதாம்**
**மூன்று பிப்ரவரியில் உயிர் நீத்தனராம்**
**மிரண்டது நமது சென்னையுமே.**

**அகில உலகமும் அலறியதாம்**
**மக்களும் கண்ணீர் விட்டனராம்**
**அந்தோ அவர் அமரரானார்**
**அந்தோ அவர் துயிலுற்றார்.**

**இருப்பினும் அவர் குணம் சிறந்ததுவாம்**
**யார் மறுப்பினும் அவரே சிறந்தவராம்**
**அறிஞர் அண்ணா வாழ்க!**
**அமரர் அண்ணா வாழ்க! “**

அண்ணா மறைந்து அரை நூற்றாண்டுக்கு மேல் ஆனாலும் தமிழ் கூறும் நல்லுலகம் அவரை என்றும் நினைவில் நிறுத்தி இருக்கும்.

முன்னெப்போதையும் விட இப்போது தான் அவரது தேவை தமிழ்நாட்டிற்கு அதிகமாக இருக்கிறது…

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இன்றைய அரசியலில் முன்பை விட அதிகம் தேவை.

மாநில உரிமைக்காக ஓங்கி ஒலிக்க வேண்டிய குரல் அதிகம் தேவை.

தமிழ், தமிழர், தமிழ்நாடு இதற்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டிய தேவை அதிகமாக உள்ளது.

“இலட்சியம் வெற்றி பெற வேண்டுமானால் அந்த இலட்சியத்தின் நியாயத்தை விளக்கி விட்டால் போதாது. அந்த இலட்சியத்திற்கு பலத்தையும் சேர்த்தாக வேண்டும். ஏனெனில் எவ்வளவு நியாயமான இலட்சியமும் பலத்துடன் கூட இருந்தாலொழிய வெற்றி பெற முடியாது “ என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கூற்றுப்படி கழகம் மீண்டும் ஆட்சிக் கட்டிலில் அமர மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்களின் சாதனைகள் நிச்சயம் வலு சேர்க்கும்.

2026 ம் ஆண்டு பொதுத்தேர்தலில் 234 தொகுதிகளிலும் வெற்றி பெற்று திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் ஆட்சி அமைக்கும். இதன்மூலம் தமிழ்நாடு தழைக்கும், தமிழ்நாட்டு மக்கள் செழிப்பார்கள்.